DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : ராஜா | Father/Husband Name : செல்லச்சாமி |
| Age : 71 | Village : சுண்டங்குளம் |
| Taluk : | Calling : ஓய்வு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11 May 2026 18:30

(Accused Present)

**முதல் விசாரணை** :-

1. நான் சுண்டங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். எங்களுக்குள் பொதுச்சுவர் பிரச்சனை இருந்து வந்தது.

2. கடந்த 21.10.2020ம் தேதி மாலை 04.30 மணியளவில் நான் வெளியே சென்றுவிட்டு வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது ஆஜர் எதிரி மதுபோதையில் என்னிடம் பொதுச்சுவருக்கு பணம் கொடு என்று கேட்டார். ஏலே சுன்னி பயலே நீயெல்லாம் ஒரு மனுசனாடா நீ எனது அப்பனுக்காட பிறந்து என்னு அசிங்க அசிங்கமாக பேசி என்னை அடிக்க கை ஓங்கினார். நான் அதை தடுத்தபோது இடது கை பெருவிரலை கடித்து சதையுடன் நகத்தையும் சேர்த்து கடித்து எடுத்து துப்பி விட்டார். என்னை கீழே தள்ளிவிட்டு என்மீது ஏறி உட்கார்ந்து என்னுடைய தாடி மற்றும் காதுகளை சேர்த்து பிடித்து என்னை தரையில் முட்ட வைத்தார். சத்தம் கேட்டு வந்த என்னுடைய மனைவி மற்றும் தம்பி ஆகியோர் எதிரியை சத்தம்போட்டு விலக்கிவிட்டார்கள். அந்த சம்பவத்தில் என்னுடைய காதிலிருந்து இரத்தம் வந்தது. என்னை அவர்கள் வீட்டிற்கு அழைத்து சென்று என்னுடைய மச்சினன் ராமசாமி பாண்டி என்னை கல்லமநாயக்கன்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்.

3. நான் சிகிச்சை முடித்து வீட்டிற்கு வந்த பிறகு 07.00 மணியளவில் எனக்கு நெஞ்சு வலிப்பதுபோல் இருந்ததால் மீண்டும் அந்த மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்காக சேர்ந்துகொண்டேன். 22ம் தேதி காலை 07.00 மணியளவில் போலீசார் வந்து சம்பவம் தொடர்பாக என்னை விசாரணை செய்து என்னிடம் புகார் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) . 23ம் தேதி என்னை விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். என்னை எதிரி கெட்டவார்த்தை சொல்லி பேசியதால் எனக்கு பதட்டமாக இருந்தது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** –

4. எனக்கு ஏற்பட்ட காயம் தொடர்பான காயம் தொடர்பான விபரங்களை நான்தான் மருத்துவரிடம் கூறினேன் என்றால் சரிதான். 6ம் வகுப்பு வரை நான் படித்துள்ளேன். புகார் மனுவை நான் எழுதவில்லை என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் நான் படித்து பார்த்தேன். புகாரை

எழுதியது யார் என்றால் என்னுடைய தம்பி சங்கரேஸ்வரன் ஆவார். போலீசார் என்னை விசாரித்த போது இந்த விபரத்தை கூறினேன் என்றால் சரிதான். என்னுடைய தம்பி எழுதிய புகாரில் அவர் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். புகார் கல்லம்மநாயக்கன்பட்டி மருத்துவமனையில் வைத்து எழுதப்பட்டது.

5. சாட்சி கோமதி நாச்சியார் என்னுடைய மனைவி ஆவார். விஜயராணி என்பது என்னுடைய தம்பி மனைவி என்றால் சரிதான். சங்கரேஸ்வரன் என்னுடைய உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். சாட்சி ஈஸ்வரி என்னுடைய தம்பி மனைவி என்றால் சரிதான். ராமசாமி பாண்டியன் என்னுடைய மச்சினன் என்றால் சரிதான். சாட்சி தர்மராஜ் என்னுடைய தம்பி உறவு முறையாகும். சாட்சி மாடசாமி எனக்கு தெரிந்த நபர் ஆவார்.

6. இந்த வழக்கு சம்பவ காலத்தில் பொது சுவருக்கு கொடுக்க வேண்டிய பணத்தை நான் எதிரியிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான், அதற்குப் பிறகு இரண்டு ஆண்டு கழித்து பணத்தை கொடுத்து எழுதி வாங்கிக் கொண்டேன். ஈஸ்வரன் என்ற சங்கரேஸ்வரன் என்னுடைய உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். எதிரி என்னிடம் சண்டை போடவில்லை என்றாலும் பொது சுவருக்கு என்னிடம் பணம் கேட்டார் என்றாலும் அதற்கு நானும் என்னுடைய தம்பி பாலமுருகனும் சேர்ந்து எதிரியை தாக்கினோம் என்றாலும் சரியல்ல. நானும் என்னுடைய தம்பியும் எதிரியை அடித்ததால் எதிரி எங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விடுவார் என்று நினைத்து நான் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்காக சேர்ந்து கொண்டேன் என்றால் சரியல்ல. எனக்கு இருந்தால் காயம் அந்த சம்பவத்தின் போது என்னுடைய தம்பியால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

7. வழக்கு சம்பவம் நடைபெற்ற தேதியில் எதற்காக புகார் கொடுக்கவில்லை என்றால் கையில் ரத்தம் வந்து கொண்டிருந்ததால் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். மருத்துவமனையில் இருந்து வந்த பிறகு காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் புகார் எழுத இருந்தபோது எனக்கு மீண்டும் நெஞ்சு வலி இருந்ததால் மருத்துவமனைக்கு சென்று விட்டேன். 21 ஆம் தேதி நான் மருத்துவமனைக்கு சென்ற பிறகு எப்பொழுது வீட்டிற்கு வந்தேன் என்றால் மறுநாள் காலை வந்தேன். 21ஆம் தேதி காலை 07.00 மணிக்கு நான் வீட்டிற்கு வந்த பிறகு என்னுடைய தம்பியிடம் ஆலங்குளம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னேன் என்றால் சரிதான்.

8. காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு தான் நான் மீண்டும் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். என்னுடைய தம்பி கடித்ததில் தான் என்னுடைய விரலில் காயம் ஏற்பட்டது என்றாலும், அதனால் தான் முதல் நாளில் நான் புகார் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல, அன்றைய தேதியில் என்னுடைய தம்பி அங்கு இல்லை. எதிரி மீது இந்த வழக்கு புகார் பின் யோசனையின் பேரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் நடைபெற்றதா என்பதை எங்களுடைய வீட்டு அருகே உள்ள கிருஷ்ணசாமி என்பவரை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் இடத்தின் அருகே பாக்கியம் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்களின் வீடு இருக்கிறது என்றால் சரியல்ல.

9. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் நேரத்தில் எங்களுடைய வீட்டில்

உள்ள நபர்கள் முன் வாசலில் இருந்தார்கள் என்றாலும், நடைபெற்றதாக கூறும் சம்பவம் எங்களுடைய வீட்டிற்கு பின் வாசல் அருகே என்றாலும் சரிதான். அவர்களுக்கு நடைபெற்ற சம்பவம் பற்றி தெரியாது என்றாலும், அவர்கள் சத்தம் கேட்டு தான் வந்தார்கள் என்றாலும் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்களை போலீசார் என்னை விசாரித்த போது கூறினேன் என்றால் சரிதான். எதிரிஎன்னுடைய தாடி மற்றும் காதை பிடித்து தரையில் மோதியதாகவும், என்னுடைய காதில் இருந்து ரத்தம் வந்தது என்பதையும் புகாரில் கூறவில்லை என்றால் கூறியுள்ளேன். எதிரி பொது சுவருக்கு என்னிடம் பணம் கேட்டதில் நானும் என்னுடைய தம்பியும் எதிரியை அடித்து விட்டு, எதிரி மீண்டும் எங்களிடம் பணம் கேட்கக்கூடாது என்பதற்காக அவர் மீது இந்த வழக்கு புகாரை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. எதிரி என்னை அசிங்கமாக பேசவில்லை என்றாலும், என்னுடைய விரலை கடிக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிரி பொறுப்பு இல்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் மனு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை வழக்கு சம்பவ தேதியில் விசாரித்த பிறகு விசாரிக்கவில்லை என்றால் புகார் கொடுத்தபோது விசாரித்தார்கள், அதன் பிறகு விசாரிக்கவில்லை. நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், நடைபெறாத சம்பவத்திற்கு நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct. 11 May 2026 18:56

(Sd/-S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur

// True copy // P.P